## குளியாபிடிய நகர சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 08 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குளியாபிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 290,167 தொகை எனினும் அதனை ரூபா 152,500 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 137,667 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 266,167 ஆக காணப்பட்டதுடன் அதனை கடன்பட்டோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) இலக்கம் 46-00866-1 கொண்ட ரூபா 3,000,000 இற்கான நிலையான வைப்புகள் தொடர்பாக 2012 ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 112,500 இனை மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்திருந்ததுடன், இலக்கம் 44-00125-1 கொண்ட ரூபா 1,457,685 இற்கான நிலையான வைப்புக்களுக்காக 2014 ஆண்டிற்கான வட்டி வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. அதே போல் சரியான காரணம் குறிப்பிடாமல் நாட்குறிப்பு இலக்கம் 08 இன் மூலம் ரூபா 1,803,948 இற்கான நிலையான வைப்பு மீதி ஒன்று திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 4,106,500 இற்கான மோட்டார் வாகனங்களின் பெறுமதி ஆண்டிற்கான மூலதன வருமானம் மற்றும் சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு களஞ்சிய இருப்பு மீதி ரூபா 4,015,238 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 22,612,596 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் இருப்பு மீதி ரூபா 18,597,358 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்வரும் வருடத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 284,005 இற்கான வீத வரி வருமானம் வருமான முற்பெறுவனவு (கடன்கொடுத்தோர்) என கணக்கீடு செய்யப்படாமல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய வீதவரி வருமான கடன்பட்டோரில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் இடையே ரூபா 4,193,206 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) பெறவேண்டிய கணக்குகளில் வருமானக் கடன்பட்டோர் ரூபா 25,142,884 தொகை ஒன்று காணப்பட்டதுடன் அதில் நிலுவை வீதவரி ரூபா 9,877,653 தொகையும் நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 3,689,672 தொகையும் பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,590,894 தொகையும் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட "சுமுது மாவத்தை" பக்க வடிகால் நிர்மாணித்தல் நிர்மாண வேலைக்காக பெறவேண்டிய ரூபா 490,000 தொகையினை பெறவேண்டிய வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 49,170,785 தொகை ஆகும். அவற்றில் மொத்தமாக 34% ஆகிய ரூபா 16,874,880 தொகை 3 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படும் மீதியாகும்.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பலவின வைப்புக்கள் ரூபா 5,990,545 ஆக காணப்பட்டதுடன் 2007 ஆண்டு முதல் 2013 ஆண்டுவரை காலமுதல் காணப்படும் ரூபா 1,524,728 இற்கான 22 வைப்பு மீதிகளை தீர்க்கப்படாமல் பலவின வைப்பின் கீழ் காணப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 34,270,508 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,886,643 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,402,197 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,515,554 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 2,267,605 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 18,255,480 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டு தொடர்பான நிதி விளைவுகள் ரூபா 1,101,232 வரை பற்றாக்குறை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 102,528,915 தொகையில் மொத்தமாக 48% என ரூபா 49,086,013 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 2,267,605 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணம் ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 87,642,272 இல் மொத்தமாக 64% ஆகிய ரூபா 55,833,993 உம் தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 63% என ரூபா 35,227,594 தொகை ஒன்று சம்பள மீளளிப்பு என உள்ளுராட்சி ஆணையாளரிடம் கிடைக்கப் பெற்று ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதனச் செலவு ஆகிய ரூபா 18,255,480 தொகையில் இருந்து மொத்தமாக 87% தொகையாகிய ரூபா 15,987,787 தொகை மாத்திரம் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வீத வரி

--------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 4454 வீத வரி அலகுகளின் கீழ் நிலுவை ரூபா 9,877,653 ஆக காணப்பட்டதுடன் அவை வருடாந்த பில் போடப்பட்டவைகளாகிய ரூபா 14,856,776 உடன் ஒப்பீடு செய்யும் போது மொத்தமாக 66% மாத்திரமே.

2.3.2 களியாட்ட வரி

-----------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 03 சினிமா கொட்டகைகள் காணப்பட்டதுடன் 2013 ஜனவரி மாதத்தின் பின்னர் குறிப்பிட்ட சினிமா கொட்டகைகளின் அனுமதிப்பத்திரங்களில் முத்திரை பதிக்கப்பட்டிருக்கவில்லை. சினிமா கொட்டகைகளினால் திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்புகின்ற அறிக்கையை அடிப்படையாக வைத்து சபையின் களியாட்ட வரி கணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் சினிமா கொட்டகைகளில் இருந்து அறவிடப்படும் களியாட்ட வரி வருமானம் 45% முதல் 59% வரையான வீச்சில் வீழ்ச்சியடைந்திருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை களியாட்ட வரி வருமானம் ரூபா 599,517 ஆகும்.

2.3.3 நீர் வருமானம்

-------------------------

சபைக்குச் சொந்தமான நீர் சுத்திகரிக்கும் நிலையம் ஒன்றினை பயன்படுத்தி சபையினாலே நீர்ச் செயற்திட்டம் அமுல் நடத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 1855 நுகர்வோருக்கு நீர் வழங்கியிருந்த போதும் மொத்த நீர் மீற்றர் காணப்படாமையால் மற்றும் மாதாந்த உற்பத்தி, விநியோகித்தல் போன்ற தகவல்கள் காணப்படாமையால் நீர்ச் செயற்திட்டத்தின் பயன்பாடு பற்றி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 3,689,672 ஆக காணப்பட்டதுடன் அவை வருடாந்த பில்போடப்பட்டவைகளில் 76% ஆகும்.

2.3.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,590,894 ஆகக் காணப்பட்டதுடன் பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணத் தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

03. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

------------------------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த ரூபா 310,000 இற்கான 07 நலன்புரி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

(அ) வீத வரி செயற்பாடு

---------------------------------

சபையின் வீத வரிச் செயற்பாடுகளுக்காக கணனி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அவற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

I. கணனி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக குறிப்பிட்ட அலுவலர்களின் மட்டத்தின் பிரகாரம் இரகசிய இலக்கம் வழங்கப்பட்டுள்ளதனால் முறையான மேற்பார்வை ஒன்று நடைபெறாமை மற்றும் அதனை அமுல்நடத்தும் அலுவலர்களுக்கு முறையான அங்கீகாரம் இன்றி ஏதேனும் தகவல்களை மாற்றக் கூடியதாக இருந்தது.

II. கணனி நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்திய 2003 ஆண்டு முதல் 2013 வரை 10 வருடங்களை மிகைத்த காலம் ஒரே அலுவலர் இந்த கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் கடமையாற்ற ஈடுபடுத்தியிருத்தல் மற்றும் கடமைகளை மாற்றுதல் அல்லது ஏனைய ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

III. அலுவலர்களினால் பற்றுச் சீட்டுக்களில் இலக்கங்களை மாற்றுவதன் மூலம் வரி செலுத்துவோரினால் செலுத்தப்படும் வீத வரி மோசடிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது என வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளும் படி உள்ளூராட்சி ஆணையாளரினால் 2014 அக்டோபர் மாதத்தில் சபை செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) நீர்ச் செயற்திட்டம்

------------------------------

2012 ஆண்டு முதல் நீர்ச் செயற்திட்டத்திற்காக கணனி நிகழ்சித்த திட்டம் ஒன்று பயன்படுத்திருந்த போதிலும் அவற்றில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

I. குறிப்பிட்ட கணனி நிகழ்ச்சித் திட்டதிற்காக இரகசிய இலக்கங்கள் வழங்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் முறையான மேற்பார்வைக்கு உட்படுத்தாமை.

II. அதே போல் குறிப்பிட்ட கணனி நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தும் நபர்களுக்கு எந்த தரவுகளையும் மாற்ற இயலுமானதாக இருத்தல்.

III. 02 வருடங்களை விட மிகையான காலம் முதல் கணனி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பதிவேடுகள் ஆகிய இரண்டும் நீர்ச் செயற்திட்டதிற்காக பயன்படுத்தி காணப்பட்டது மற்றும் 2014 திசெம்பர் வரை கணனி நிகழ்ச்சித் திட்டம் முறைப்படி செயற்பட்டிருக்கவில்லை.

IV. 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவேடுகளின் பிரகாரம் நிலுவை மீதி மற்றும் கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் நிலுவை மீதி இடையே பாரிய வித்தியாசம் ஒன்று காணப்படல்.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்